செய்தி வெளியீடு எண்:1016 நாள்:21.11.2008

## பத்திரிக்கை செய்தி

தமிழ் நாட்டில் பொது விநியோக திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க மாதம் ஒன்றுக்கு 11283 மெ.டன் கோதுமை தொடர்ந்து நவம்பர் 08 மற்றும் டிசம்பர் 08 ஆகிய மாதங்களிலும் விநியோகிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் சென்னைக்கு 1900 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. . எனவே,

- சென்னை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கோதுமை 10 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்
- குடும்ப அட்டைதாரர்கள் கோதுமையுடன் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவும் வாங்கி கொள்ளலாம்

இதனை, குடும்ப அட்டைதாரர்கள், அவர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக்கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. கோதுமை மற்றும் கோதுமை மாவு பெறுவதில் குறைகள் இருப்பின் சென்னை துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு, (போன்-- 28551028) அல்லது தெற்கு (போன்-- 28551026 ) அல்லது மின் அஞ்சல் மூலம் www.consumer.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவு செய்யலாம்.

ஆணையாளருக்காக

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9